விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 047 வள்ளுவர் ஆண்டு 2054 தை 21 சனிக்கிழமை (04.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

வலி.வடக்கில் இராணுவ வசமிருந்த

## 109 ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு




(யாழ்ப்பாணம்)
வலி.வடக்கில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த சுமார் 109 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு, காணி உரிமையாளர் களுக்கு வழங்கப்பட் 11

## 75வது இலங்கையின் சுதந்திர தினம் இன்று

(கொழும்பு)

- காலி முகத்திடலில் பிரதான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு.
- எதிர்ப்புப் போராட்டங்களைத் தடுக்க பலத்த பாதுகாப்பு.
- 16 நாடுகளின் இராஜதந்திரிகள் பங்கேற்பு.



(11ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

- எழுச்சிப் பேரணியில் அணிதிரளுமாறு அழைப்பு.
- யாழிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி ஆரம்பமாகவுள்ளது.
- வீடுகள், பொது இடங்களில் கறுப்புக் கொடிகளை ஏற்றுமாறு கோரிக்கை.
- சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாள்.




(11ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திர தினத்தை முன்னிட்டு

## 588 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)
75வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு 588 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ள தாக சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.
நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச் 11

## டிஜிட்டல் சாரதி அனுமதிப் பத்திரம்

விரைவில் அறிமுகம்

(கொழும்பு)
ஒழுக்கமான சாரதிகளை உருவாக்கும் நோக் கில், டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த 11

## சுதந்திர தின நிகழ்வில் பங்குபற்ற மாட்டேன்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
இன்று கொண்டாடப்பட வுள்ள தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ 11

## இலங்கை - அமெரிக்க உறவை வலுப்படுத்த எதிர்பார்க்கின்றோம்

சுதந்திர தின வாழ்த்தில் அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)
இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தின கொண் டாட்டத்துடன் இணைந்ததாக இலங்கைக்கும் அமெரிக்கா விற்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் விஸ்தரிக்கவும் எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரி வித்துள்ளார்.
75ஆவது தேசிய 11



## 13வது அரசியல் திருத்த சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் அண்ணாமலை நேரில் வலியுறுத்து



(புதுடில்லி)
இலங்கையில் 13ஆவது அரசியலமைப்பு திருத் தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண் டும் என தமிழக மாநில பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் குப்புசாமி அண்ணா 11

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்

## இரு உறுப்பினர்கள் பதவி விலகுவதாக அறிவிப்பு

(கொழும்பு)
பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப் பினர்கள் இருவர் தமது பதவி விலகலை அறிவித்துள்ளனர்.
இதன்படி, பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் உப தலைவர் உதேனி விக் கிரமசிங்க மற்றும் அதன் உறுப்பினரான மொஹான் சமரநாயக்க ஆகியோரே இவ் வாறு பதவி விலகுவதாக அறி வித்துள்ளனர்.
தங்களது பதவி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
### தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா




**காலம் : 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு** இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து பால்குடப் பவனி ஆரம்பம்.

**காலை 9.30 மணிக்கு** மாபெரும் பொங்கல் ஆரம்பித்து 2.30 மணி வரை நடைபெறும்.

**மாலை 6 மணிக்கு** நூற்றாண்டு பழமை வாய்ந்த உலகப் பெரு மஞ்சத்தில் ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் நிகழ்வும் தமிழரின் பாரம்பரியமான கரகம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம் சுற்றுதல், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொலைவிலிருந்து வரும் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயமுன்றலில் பெற்றுக்கொள்ளலாம்.

**முருகன் அடியவர்கள் உலகப் பெருமஞ்ச வடம் தொட்டிழுக்க வாரீர்...**

**முருகன் அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

விளம்பர அனுசரணை

(C-5890)

**மதுசாலினி**

**கிறைண்டிங் மில் & இன்ரஸ்ரி**



**இணுவில் மேற்கு.**


# பெப்ரவரி 22, 23, 24 இல் தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான அஞ் சல் மூல வாக்களிப்பு திகதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன. இதன்படி. எதிர்வரும் 22. 23 மற்றும் 24ஆம் திகதிகளில் அஞ்சல் மூல வாக்களிப்பை மேற்கொள்ள முடியும் என தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை. எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி யன்று உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது.

இதற்கிடையில் உள்ளூராட்சிமன்ற தேர் தலை நடத்த வேண்டும் என்று கோரியும். நடத்தக் கூடாது என்று கோரியும் உயர்நீதிமன் றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்

## மகேஸ்வரன் தேவவல்லி

**பிறப்பு**
**02 . 01 . 1962**



**இறப்பு**
**02 . 02 . 2023**


புத்தூர் மேற்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் மகேஸ்வரன் தேவவல்லி கடந்த (02.02.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் - பரமேஸ்வரி தம்பதி யரின் பாசமிகு மகளும் கோமளவல்லி ஆனந்தநடராஜன், ஆனந்தகுமாரசாமி, கௌரி ஆகியோரின் சகோதரியும் தமிழ்ச்செல்வன், கவீந்திரன், கௌரி, விஜி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாய்நடராஜனின் சித்தியும் சஜீதா, ஹரிஷன் ஆகியோரின் பெரியம்மாவும் வளவன், கலைஞன், லட்சுமி, ஓவியா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிந்திட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.இ. 076 286 1394, 077 706 4524** (14492)

**தகவல் - சகோதரர்கள்**
**ம.ஆனந்தநடராஜன்** (ஆசிரியர், மாங்குளம் ம.வி)



**பிறப்பு – 17.04.1936** **இறப்பு – 31.01.2023**

# மரண அறிவித்தல்

## இராசையா அன்னலிங்கம்

இராசையா அன்னலிங்கம் அவர்கள் கடந்த 31.01.2023 அன்று காலமானார்.

அன்னார் இராசையா-செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், அன்னலட்சிமியின் அன்புக் கணவரும், பூசனா (பிரான்ஸ்), நந்தன், நகுலன் (வர்த்தகர்- வட்டக்கச்சி), உதயன் (கொழும்பு), ஜீவன் (சுவிஸ்), ராசன் (வர்த்தகர் - வட்டக்கச்சி), செல்வன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வரதன், இதயம், சுகி, சுபா, கலா (சுவிஸ்), அமுதா, தனுசா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், ரஞ்சன் (சுவிஸ்), சங்கீதா (சுவிஸ்), யது (யாழ்ப்பாணம்), சிந்துஜன் (யாழ்ப்பாணம்), அனந்தினி, கஜா, அரவிந் கோபி, அனோஜன், அசா, நந்து (சுவிஸ்), ஜீசா (சுவிஸ்), சயா, சரணி, சாரு, சானு, ரக்சா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், தர்மலிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், இராசமணி மற்றும் மகாலிங்கம் (கொழும்பு), சபாரத்தினம் (ஜேர்மனி), கதிர்காமலிங்கம் (ஜேர்மனி), கமலா (கனடா), ராணி (பிரான்ஸ்), ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், பூவாவதி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி (கனடா), கனகம்பிள்ளை (பிரான்ஸ்), நிர்மலா (ஜேர்மனி), பகவதி, அரியம், தம்பிராசா, சிவபாதம் காலஞ் சென்றவர்களான செரனம்மா, பூமணி, காந்திமதி மற்றும் தச்சனா, நவமணி, கந்தசாமி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். சங்கீதா, ரக்ஸ்சித், அபிசா, தனுசா, அதர்வா, அபிநயா, வைசாலினி அவர்களின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று ஞாயிற்றுக் கிழமை (05.02.2023) காலை 11.30 மணியளவில் வட்டக்கச்சி மம்மில் மயானத்தில் அன்னாரின் உடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தல் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**

நகுலன் (வட்டக்கச்சி) – 077 557 3263, உதயன் (வட்டக்கச்சி)– 077 362 2337, பூசனா (பிரான்ஸ்) – 003 362 499 0606,
ராசன் (வட்டக்கச்சி) – 077 509 7760, செல்வன் (சுவிஸ்) – 004 178 250 9469, ஜீவன் [illegible]

(C-5901)

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகளுக்கு உடந்தையாகவுள்ள உள்ளூராட்சி சபைகளை கலைக்க முடிவு

(கொழும்பு)

**ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் உள்ளூராட்சி சபைகளை உடனடியாக கலைக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

சில உள்ளூராட்சி சபைகள் தொடர்பான ஊழல், மோசடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம் புர தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சி சபைகள் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக உள்ளூராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளை கலைக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சி சபைகளை கலைப்பது தொடர்பாக ஆளுநர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர் அல்லது மேயர் மாத்திரம் மோசடி மற்றும் ஊழல் செய்திருந்தால் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்றும் முழு சபையின் அங்கீகாரத்துடன் ஊழல் மோசடி இடம்பெற்றிருந்தால், முழு சபையுமே கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-6)

## முன்னாள் பேராயர் ஒஸ்வேல் கோமிஸ் காலமானார்



(கொழும்பு)

கொழும்பு மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தருமான கலாநிதி ஒஸ்வேல் கோமிஸ் ஆண்டகை நேற்று முன்தினம் தனது 90 ஆவது வயதில் காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் இயற்கை எய்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# 13 ஐ முழுமையாக அமுலாக்க ஒருபோதும் இடமளியோம்!

## மீண்டும் விமல் எகத்தாளம்

(கொழும்பு)

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"13 ஐ முழுமையாக அமுலாக்க இடமளிக்கமாட்டோம். அதனை தோற்கடிக்க எல்லா வழிகளிலும் போராடுவோம்" என்றும் விமல் குறிப்பிட்டார்.

அதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் மகா நாயக்க தேரர்களால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தையும் விமல் வரவேற்றார். (4-6)



# குளங்கள் வான்பாய்வதால் நெற்செய்கை பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவில் இரு குளங்கள் வான் பாய்வதன் காரணமாக 1,000 ஏக்கருக்கு மேலான அறுவடைக்குத் தயாரான நெற் பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளதாக அம்பலப்பெருமாள் கமக்கார அமைப்பு தெரிவித்துள்ளது.

அம்பலப் பெருமாள் குளம், கோட்டைக்கட்டியகுளம் ஆகிய இரு குளங்களும் வான் பாயும் வேளையில் கழிவு ஆறு துப்புரவு செய்யப்படாததன் காரணமாக வான் வெள்ளம் வயல்களில் உள்ள அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்களை மூடிப் பாய்கிறது.

இதனால் அம்பலப்பெருமாள் குளத்தில் 1 ஆம் வாய்க்கால், 3ஆம் வாய்க்கால், 5 ஆம் வாய்க்கால், 6 ஆம் வாய்க்கால், 10 ஆம் வாய்க்கால் ஆகிய பகுதிகளில் உள்ள 625 ஏக்கர் நெற்பயிர்களை வான்வெள்ளம் மூடிப் பாய்வதோடு கோட்டைக் கட்டிய குளத்தின் வான் வெள்ளம் 400 ஏக்கர் நெற்பயிர் நிலத்தினை மூடிப் பாய்கின்றது.

இரு குளங்களின் கழிவு ஆறு துப்புரவு செய்யப்பட்டிருந்தால் வயல் நிலங்களுக்குள் குளங்களின் வெள்ளம் பரவாது என அம்பலப்பெருமாள் கமக்கார அமைப்பு தெரிவித்துள்ளது. (4-6-350)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மில்.கணக்கில் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவைக் கண்டுள்ள நிலையில், அனைத்துத்துறைகளிலும் நிதி ஒதுக்கீடுகளில் குறைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் 2023 ஆம் ஆண்டில் முன்னைய ஜனாதிபதிகளுக்காக மில்லியன் கணக்கான நிதிகள் தொடர்ந்து ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய 4 ஜனாதிபதிகளுக்கும் மறைந்த ரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாசவுக்கும் இந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு பொருளாதாரப் பேரழிவையடுத்து திறைசேரி, 2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒது க்கீடுகளை தன்னால் இயன்ற அனைத்துப் பகுதிகளிலும் குறைத்து வருகிறது.

உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, 2022 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க விற்கு ஒதுக்கப்பட்ட சுமார் 14 மில்லியன் ரூபாவும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் 22 மில்லியன் ரூபாவும் மாற்ற மின்றி ஒதுக்கப்பட்டுள்ளன.

மைத்திரிபால சிறிசேனவுக்கு 2022 ஆம் ஆண்டு போன்றே சுமார் 22 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் குறைந்தது 21 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் ஹேமா பிரேமதாசவு க்கும் குறைந்தது 7 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (4-6)

# கொட்டித் தீர்த்த கனமழை வவுனியாவில் 63 பேர் பாதிப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் பெய்த கடும்மழை காரணமாக 23 குடும்பங்களை சேர்ந்த 63 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக திருநாவற்குளம், மகாறம்பைக்குளம், வெங்கலச் செட்டிக்குளம், பிரமநாலங்குளம் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதுடன் சில வீதிகளும் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

இதேவேளை அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும் வவுனியா நகரில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்றுக் காலை வரையான 24 மணித்தியாலயத்தில் 189.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# குளவி கொட்டியதில் சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பாறை - உகண பொலிஸ் பிரிவில் கோமாரிய பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் மரமொன்றில் காணப்பட்ட குளவிக் கூடு பருந்துகளால் கலைக்கப்பட்டுள்ளது. இதன் போதே குறித்த சிறுவன் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த சிறுவன் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர விழிகளுடன்
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மகிழ 08 • 12 • 2001
அகம்நெகிழ 16 • 01 • 2022

செல்வன் விக்னேஸ்வரன் வினோஜன்
(யா/மத்திய கல்லூரி உயர்தரமாணவன் கலைப்பிரிவு 2023)
(டினோக் குட்டி)

மலர்ந்து மணம் வீச முன்னரே
வாடிப்போன பூவே டினோ
ஆண்டொன்று கடந்தாலும் உன்னை
மறந்து கடந்து சென்று விட முடியாது.
மண்ணில் உலவும் வரை
மலரும் உன் நினைவுகள்...
உன் நினைவுகள் என்றும்
அம்மா, அப்பா, தம்பி
எம் இதயத்தில் தினமும்
ஈரத்தை தேடுகின்றது.
பூமியும் எம் இதயங்களும்
காய்ந்திருக்கும் போது
நீ மழை யென வா டினோ



வினோஜன் சத்திய மனை
ஐயனார் கோவில் அருகாமை,
நாவற்குழி மேற்கு,
நாவற்குழி.
(14490)

T.P : 077 962 8431
ஆறாத்துயரில் தவிக்கும் :- அப்பா, அம்மா, தம்பி.


# போராட்டத்திற்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட தொழிற்சங்க செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படவிருந்த போராட்டத்தை தடைசெய்து உத்தரவு பிறப்பிக்குமாறு குருதுவத்தை பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நிராகரித்துள்ளார்.

75 ஆவது சுதந்திரதின நிகழ்வில் ஜனாதிபதி. பிரதமர் உள்ளிட்ட பொதுமக்கள் பங்கேற்கும் அரச வைபவம் இன்று காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளதால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 106 (01) பிரிவின் பிரகாரம் இந்தப் போராட்டக்காரர்கள் நடத்தும் போராட்டத்துக்குத் தடைவிதிக்க வேண்டும் என பொலிஸ் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்திருந்தார். (ம)


## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்
  (பெண்கள் - பகல் கடமை)
- அலுவலகச் செய்தியாளர்கள்
  ஆண்கள் - இரவுக் கடமை)
- ஒப்புநோக்குநர் (Proof Reader)
  (ஆண்கள் - இரவுக் கடமை)

**வயது**
25 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள்

**கல்வித் தகைமை**
க.பொ.த உயர்தரம்

- கணனி பக்க வடிவமைப்பாளர்
  (ஆண்,பெண் இருபாலாரும்)

**குறிப்பு**
யாழ்.நகருக்கு அண்மையாக இருப்பவர்கள் மட்டும். தகைமையும் விருப்பமும் உடையவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 05.02.2023 முற்பகல் 10.00 மணிக்கு நேரில் வரவும் (இ)

மேலதிக தொடர்புகளுக்கு 076 097 3121



1 ஆம் ஆண்டு நினைவு

தியாகராஜா செல்வராணி
தை பூர்வபக்க சதுர்த்தசி

ஆயிரம் சுமையுடன்
அகம் நோக்கி வந்தோம்
அத்தனை சுமைகளும்
அற்றுப் போனதே – உன்
முகம் காண்கையில்

ஐயிரண்டு மாதங்கள்
அகவறையில் சுமந்து
அடிவயிறு நொந்து
ஐவரை ஈன்று
அகமலர்ந்து
மடியிலும் மார்பிலும்
தோளிலும் சுமந்தாயே!

விடுமுறை இல்லாத – உன்
அலுவலகத்தில் –
அகமகிழ்வுடன்
அவசர அவசரமாக
அறுசுவை உணவை
பாசத்துடன் பரிமாறி
ஒரு குடையின் கீழ்
வளர வைத்தாய்

பார் போற்ற நாம் வாழ
வாழ் நாள் முழுவதும்
எமைச் சுமந்தாயே
இத்தனை வேலைக்கும் – உம்மை
எம் மனதில் சுமப்பதே
நாம் தரும் சம்பளம்

பன்னிரு மாதங்கள்
பார்த்திருக்க
பறந்து போனதம்மா
அன்னையின்
ஆத்மா சாந்திக்காக
எம் நன்றி மலர்கள்
காணிக்கை



மண்மகிழ 10.01.1949
கண்நெகிழ 16.01.2022

தில்லையம்பதி, கோண்டாவில்,
தொடர்பு :- 077 316 1389
தகவல் :- குடும்பத்தினர்
(14497)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா நேர்மையை வெளிப்படுத்த வேண்டும்

## சீன வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

**இலங்கைக்கு உதவும் விடயத்தில் அமெரிக்கா நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.**

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அமெரிக்கா தெரிவித்துள்ள கருத்து உண்மையை வெளிப்படுத்தவில்லை என குறிப்பிட்டுள்ள சீன பேச்சாளர் கடன் பேண்தகுதன்மையை இலங்கை தொடர்ந்து பேணுவதற்காக சீனாவின் எக்சிம் வங்கி கடிதமொன்றை இலங்கைக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சாதகமாக பதிலளித்துள்ளதுடன் நன்றி தெரிவித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையுடனான சீனாவின் நெருங்கிய ஒத்துழைப்பை நோக்கி விரல்களை நீட்டுவதற்கு பதில் அமெரிக்கா நேர்மையை வெளிப்படுத்தி இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு உதவ வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நட்புறவு மிக்க நேசநாடு நெருங்கிய நண்பன் என்ற அடிப்படையில் சீனா இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை நெருக்கமாக அவதானித்து வருவதுடன் தன்னால் முடிந்த அளவிற்கு இலங்கைக்கு சமூக பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றது.

சீனாவிற்கான இலங்கையின் கடன்களை பொறுத்தவரை உரிய தீர்வை காண்பதற்கு உரிய நிறுவனங்கள் இலங்கை தரப்புடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு உதவுவதற்கு சீனா தயாராக உள்ளது என மாவோ நிங் தெரிவித்துள்ளார். (4-6)

# களனிதிஸ்ஸ மின் நிலைய செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

களனிதிஸ்ஸ கூட்டு சுழற்சி மின் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் மின் உற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

165 மெகாவாட் மின்சாரத்தில் இயங்கி வரும் இந்த ஆலை, தேசிய மின் கட்டமைப் பிற்கு பாரிய பங்களிப்பை வழங்கி வரும் நிலையில், மின் உற்பத்திக்கு தேவையான நாப்தா கையிருப்பு இல்லாததால் நிறுத்தப்பட்டதாகவும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

எண்ணெய் நிறுவனத் திடம் 2000 மில்லியன் லீற்றர் இருந்தபோது நாப்தா வழங்கப்படாததால் இந்த ஆலை செயலிழந்தது என்றும் அந்த அதிகாரி கூறினார். (4-6)

# தந்தைக்கு எமனான மகன்

(கொழும்பு)

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மூத்த மகன் தந்தையை பொல்லால் தாக்கி கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மூன்று ஆண் பிள்ளைகளின் தந்தையான குமாரவேல் தியாக பிரகாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் தனது தந்தையை தாக்கியதாக பொலிஸாருக்கு வாக்கு மூலம் வழங்கிய மூத்த மகன் கந்தப்பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பில் அயல் வீட்டார் இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6)

# சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை - டலஸ்

(கொழும்பு)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்கப்போவதில்லை என அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் உடன்பட முடியாத காரணத்தினால் தான் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.



இதேவேளை, இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப்போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# இலங்கையின் உயரிய விருது கரு ஜெயசூரியவுக்கு

(கொழும்பு)

இலங்கையின் உயரிய தேசிய விருதான 'ஸ்ரீலங்கா பிமன்யா' என்ற பட்டத்தை தேச பந்து கரு ஜயசூரியவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி விக்கிரம சிங்கவினால் கரு ஜயசூரியவிற்கு இந்த வாழ்நாள் முழுவதும் உயரிய விருது வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



82 வயதான முன்னாள் சபாநாயகரும் தற்போதைய சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின்தலைவருமான அவர், மதிப்பு மிக்க விருதை பெறும் எட்டாமவராவார். (4-6)

# இராசிபலன்

04.02.2023
தை 21, சனிக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 10.35 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 10.31 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

சந்திராஷ்டமம்
பூராடம்
உலக புற்றுநோய் தினம்.

வளவன்



மேஷம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




கடகம்

கொடுக்கல் வாங்கல்களில கவனம் தேவை, எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், பயணத்தால் பலன் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள்.




துலாம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களை எளிதில் முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழில் முன்னேற்றமுண்டு.




மகரம்

நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




ரிஷபம்

நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உடல் நலனில் அக்கறை தேவை, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சிம்மம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியச்செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.




விருச்சிகம்

சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




கும்பம்

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரன்பாடுகள் அகலும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.




மிதுனம்

வழிபாடு காரிய வெற்றி தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.




கன்னி

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



தனுசு

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.



மீனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

நல்ல எண்ணங்கள் செயல் வடிவங்களாக உருப்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்களின் எழுச்சி பேரணியை வலுச்சேர்க்க அனைவரும் ஒன்றுதிரளுங்கள்

## சிறீதரன் எம்.பி அழைப்பு

(கிளிநொச்சி)

**யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலை முன்றலிலிருந்து ஆரம்பிக்கப்படும் "வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய" எழுச்சிப் பேரணிக்கு வலுச்சேர்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது இனத்தின் கனவுகளைச் சுமந்த இலட்சியப் பயணத்தின் நீட்சிக்கான படிமமாக, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களோடு இணைந்து முன்னெடுத்திருக் கும் எழுச்சிப் பேரணியானது இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பித்து எதிர்வரும் 7 ஆம் திகதி மட்டுநகரைச் சென்றடையவுள்ளது.

எமது மாணவர்களின் இப் பெரு முன்னெடுப்புக்கு சமூக, மத மற்றும் கட்சி பேதங்களற்று பேராதரவு வழங்க வேண்டிய காலக்கடமை நம் எல்லோருக்கும் உள்ளதை உணர்ந்து, தமிழ்த் தேசியப் பற்றுறுதி மிக்க எமது மக்கள் அனைவரையும் இவ் உணர்வெழுச்சிப் பேரணியில் இணைந்து கொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.

அதேவேளை இன்று சனிக்கிழமை பிற்பகலில், பேரணி கிளிநொச்சியை வந்தடையும் நேரத்தில், அந்நகர வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்



களை மூடியும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும் ஆதரவளிக்கும் அதேவேளை, இன்று பிற்பகல் 3 மணிக்கு கரடிப்போக்குச் சந்தியில் ஆரம்பித்து இரணைமடுச் சந்திவரை நீளும் எழுச்சிப் பேரணிக்கு பொதுமக்களை கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ்.கம்பன் விழா-2023

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் 2023 ஆம் ஆண்டுக்கான யாழ்.கம்பன் விழா எதிர்வரும் 10,11,12 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம், நல்லை ஆதீன கலாமண்டபம் ஆகியவற்றில் இவ்விழாவின் நிகழ்ச்சிகள் காலையும் மாலையும் நடைபெறவுள்ளன. வழமைபோல இலக்கிய ஆணைக்குழு, சிந்தனை அரங்கம், பட்டிமண்டபம், விவாத அரங்கம், வழக்காடு மன்றம், மங்கல இசைக்கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் இவ்விழாவில் அரங்கேறவுள்ளதோடு நம் நாட்டிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் பல பேச்சாளர்கள் இவ்விழா நிகழ்வுகளில் கலந்துகொண்டு பேசவுள்ளனர் என யாழ்.கம்பன் கழகத்தின் செயலாளர் க.கஜரூபன் அறிவித்துள்ளார். (4-6)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் 12 ஆவது பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 12 ஆவது பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி. மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையத்தின் இயக்குநர் அருட்பணி ம.டேவிட் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.(4-6)

# அக்கரை சுற்றுலாக் கடற்கரையில் கடற்படைக்கு காணி வழங்க முடியாது

## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ்

(யாழ்ப்பாணம்)

அக்கரை சுற்றுலாக் கடற்கரையில் கடற்படைக்கு காணி வழங்கப்படுவதற்கு பிரதேச செயலகம் மேற்கொண்ட முடிவை உடனடியாக ஏற்க முடியாது எனவும் அரச காணிகள் தொடர்பான அதிகாரம் மத்திய அரசில் காணப்படினும் அக் காணி உள்ளூராட்சி மன்றத்தின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டது ஆகையால் தனது அனுமதி இன்றி காணியை வழங்க முடியாது எனத் தெரிவித்ததோடு இராணுவமயப்படுத்தலை ஏற்க முடியாது எனவும் தவிசாளர் தி.நிரோஷ் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சியில் உள்ள அக்கறை சுற்றுலா மையத்தில் கடற்படையினருக்குக் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம், கடிதம் மூலம் பிரதேச சபைக்கு அறிவித்துள்ளது.

இவ் அறிவிப்பினைத் தொடர்ந்து பிரதேச சபையின் நிறைவேற்று அதிகாரியான தவிசாளர், உள்ளூராட்சி மன்றிற்கு உரிய முடிவுகள் தொடர்பாக தவிசாளர் என்ற முறையில் சபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கே அதிகாரம் உண்டு என்பதையும் படைத் தரப்பிற்கு காணியை வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளதுடன் பிரதேச செயலகத்தினால் கடற்படையினருக்கு காணி வழங்க எடுக்கப்பட்டுள்ள முடிவை உடனடியாக நிறுத்துமாறும் பிரதேச செயலருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் ஆளுநர், அரச அதிபர், மாகாண காணி ஆணையர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளன. குறித்த காணி பிரதேச சபையினால் சுற்றுலாத்துறைக்கு என மில்லியன் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலா மையம் மற்றும் சிறுவர் பூங்காவை உள்ளடக்கிய கடற்கரையாக மக்கள் பாவனையில் உள்ளது. சுற்றுலா வலயம் ஒன்றை இராணுவமயமாக்குவது அபி விருத்திக்கு முரணான விடயமாகும். இதனையும் மீறி அதிகாரிகள் நடந்து கொள்வார்கள் ஆயின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித் தார். (4-6-104)

# பெருமளவு ஹெரோயினுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நிட்டம்புவ பகுதியில் 1 கிலோ 250 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருந்தில் போதைப்பொருளை கடத்திய ஒருவர் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்திற்கு இரகசிய தகவல் கிடைத்திருந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரகசியத் தகவலின் அடிப்படையில், நிட்டம்புவவில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துக்குள் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் 46 வயதுடைய நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6)

# யாழில் சுதந்திரதின முன்னேற்பாட்டு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள தேசிய சுதந்திர நிகழ்வு தொடர்பான முன்னேற்பாட்டு கூட்டத்தில் நிகழ்வு தொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற தேசிய சுதந்திர நிகழ்வு தொடர்பான முன்னேற்பாட்டு கூட்டத்தின் பின் கருத்துத் தெரிவிக்கையில், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் 75 ஆவது சுதந்திர சுதந்திர தினத்தை நினைவுகூரும் முகமாக வருகின்ற 11 ஆம் திகதி தேசிய சுதந்திர தின விழா வைபவங்கள் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தின் வட பிராந்திய அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் இளங்கோவனின் பொறுப்பிலே ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

நிகழ்வு தொடர்பான பல்வேறுபட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. காலையில் யாழ். கலாசார மத்திய நிலையத்தினை உத்தியோகபூர்வமாக முறைப்படி கையளிக்கின்ற நிகழ் வும் மாலையில் கலை நிகழ்வுகளும் இடம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராணுவத்தின் உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், வட மாகாணத்துக்குட்பட்ட அரசாங்க அதிபர்கள் சூம் செயலி மூலம் இணைந்து கொண்டனர்.

(4-6-33-104)

# காரைநகர் - ஊர்காவற்றுறை கடற் பாதையை சீர்செய்து சேவையில் ஈடுபடுத்துங்கள்

## பொதுமக்கள் வேண்டுகோள்



(அராலி)

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையில் கடற்பயணத்தில் ஈடுபட்ட கடற்பாதை பழுதடைந்ததனால் கடற்பயணத்தில் ஈடுபடும் பயணிகள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

காரைநகர், வட்டுக்கோட்டை பகுதிகளில் இருந்து ஊர்காவற்றுறையில் நீதிமன்றம், மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகியவற்றில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு தேவைகளுக்கு பயணம் செய்வோர் குறித்த கடற்பாதையினை பயன்படுத்தி வந்தனர்.

குறித்த கடற்பாதை பழுதடைந்ததால் கட்டணம் செலுத்தி படகு மூலம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த கடற்பாதையானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வந்தது. இருப்பினும் அவர்களிடம் நிதி வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பாதையை சீர்செய்ய முடியவில்லை.

எனவே பிரதேச சபை அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒரு முடிவுக்கு வந்து இந்த கடற்பாதையை மீளவும் சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்குள் இனி நுழைய முடியாது

## பிரதமர் ரிஷி சுனக்

(லண்டன்)

**சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர் பிரித்தானியாவுக்குள் நுழைந்தால் கைது செய்யப்படுவதோடு நாடு கடத்தப்படுவார்கள் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.**

அந்நாட்டின் பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர் பிரித்தானியாவுக்குள் நுழைந்தால், அவர்கள் தங்க வைக்கப்படமாட்டார்கள். அவர்கள் கைது செய்யப்படுவதுடன், நாடு கடத்தப்படுவார்கள். மேலும் வரும் வாரங்களில் புலம்பெயர்ந்தோரின் படகுகளை நிறுத்தும் மசோதா சட்டமாக்கப்படவுள்ளது.

அந்த மசோதாவில், நீங்கள் சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்குள் வந்தால், நீங்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படுவீர்கள் என்பது திட்டவட்டமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத புலம்பெயர்தல் பிரச்சினையை சரி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறோம் எனவும் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார். (4-6)



# வரலாறு மீண்டும் நிகழும் ஜேர்மனியை எச்சரித்த புடின்



(மொஸ்கோ)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை நாஜி ஜேர்மனிக்கு எதிரான போராட்டத்துடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் ஒப்பிட்டுள்ளார்.

ஸ்டாலின்கிராட் போர் முடிவடைந்த 80 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் உரையில், உக்ரைனுக்கு டாங்கிகளை அனுப்பும் ஜேர்மனியின் முடிவை மேற்கோள் காட்டிய ரஷ்ய ஜனாதிபதி, வரலாறு மீண்டும் நிகழும் என எச்சரித்தார்.

வோல்கோகிராடில் உரையாற்றிய புடின், 'போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிப்பார்கள் என்று நம்புபவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ரஷ்யாவுடனான ஒரு நவீன போர் அவர்களுக்கு மிகவும் வித்தியாசமாக இருக்கும்.

நாங்கள் எங்கள் டாங்கிகளை அவர்களின் எல்லைகளுக்கு அனுப்பவில்லை, ஆனால் பதிலளிப்பதற்கான வழிகள் எங்களிடம் உள்ளன' என கூறினார். (4-6)


# சீன கண்காணிப்பு பலூனை சுட்டு வீழ்த்த அமெரிக்கா திட்டம்

(வோஷிங்டன்)

சீன கண்காணிப்பு பலூனை கண்காணித்து வரும் அமெரிக்கா, அதன் இடிபாடுகள் விழும் அபாயம் இருப்பதாகக் கருதப்பட்டதால், அதைச் சுட்டு வீழ்த்த திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நிலைமை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், சீனா இன்னும் இது குறித்து கருத்துத் தெரிவிக்கவில்லை.

சீனாவிற்குச் சொந்தமான கண்காணிப்பு பலூன், சமீபத்திய நாட்களில் முக்கியமான இடங்களில் பறப்பதைக் கண்டறிந்துள்ளது. இது சமீபத்தில் மேற்கு மாநிலமான மொன்டானாவிற்கு மேலே



காணப்பட்டது.

கடந்த புதன்கிழமை மொன்டானாவில் உள்ள பில்லிங்ஸ் நகரின் மீது தோன்றுவதற்கு முன், இந்த பொருள் அலாஸ்காவின் அலுடியன் தீவுகள் மற்றும் கனடா வழியாக பறந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (4-6)

# கொரிய தீபகற்பத்தை அமெரிக்கா ஆயுதக் களஞ்சியமாக மாற்றுகிறது

## வடகொரியா குற்றச்சாட்டு

(பியாங்யாங்)

கொரிய தீபகற்பத்தை அமெரிக்கா போர் ஆயுதக் களஞ்சியமாக மாற்றுவதாக வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட வடகொரிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நட்பு நாடுகளின் பயிற்சிகளின் விரிவாக்கம் கொரிய தீபகற்பத்தை பெரிய போர் ஆயுதக் களஞ்சியமாகவும் மிகவும் முக்கியமான போர் மண்டலமாகவும் மாற்ற அச்சுறுத்துகிறது.

மிகப்பெரும் அணுசக்தியுடன் நட்பு நாடுகளின் எந்தவொரு குறுகிய கால அல்லது நீண்டகால இராணுவ சவாலையும் எதிர்கொள்ள வடகொரியா தயாராகவுள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் அடிமைப் படைகளின் பொறுப்பற்ற இராணுவ மோதல், சூழ்ச்சிகள் மற்றும் விரோதச் செயல்கள் காரணமாக கொரிய தீபகற்பம் மற்றும் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் அரசியல் நிலைமை தீவிர சிவப்புக் கோட்டை எட்டியுள்ளது.

அணுவாயுதத்திற்கான அணுகுண்டு மற்றும் ஒரு முழு மையான மோதலுக்கு ஒரு முழு மையான மோதல் என்ற கொள்கையின் அடிப்படையில், அமெரிக்காவின் எந்தவொரு இராணுவ முயற்சிக்கும் வடகொரியா கடுமையான எதிர்வினையை எடுக்கும்.

கொரிய தீபகற்பம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமெரிக்கா தொடர்ந்து மூலோபாய சொத்துக்களை அறிமுகப்படுத்தினால், வடகொரியா அதன் இயல்புக்கு ஏற்ப அதன் தடுப்பு நடவடிக்கைகளை தவறாமல் தெளிவுபடுத்தும்' என்று வடகொரிய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (4-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 22 சூரி 8 செவ் 9 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Bcs in IT. Software Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/10617

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: சூரி, செவ் 7 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்:B.Com HNDA பட்டதாரி நிரந்தர தொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்
தொ.இ: B/10619

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 39 சூரி, செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை:தொழில்: A/L (சமுர்த்தி உத்தியோகத்தர்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/10620

பிறப்பு: 1980இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: B/10622

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 22 ½ சூரி , செவ் 2 இல்
உயரம்: 156 cm
தகைமை/தொழில்: HNDA,DO
எதிர்பார்ப்பு: தகுந்தவரன்
தொ.இ: G/12012

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா: 68 சூரி 1 செவ் 11 இல்
உயரம்: 4'8"
தகைமை/தொழில்:A/L(சுருக்கெழுத்தாளர்)
எதிர்பார்ப்பு: நிரந்தரதொழில் விவாகரத்தானவர்
தொ.இ: G/12013

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா: 43 ½ சூரி, செவ் 12 இல்
உயரம்: 158 cm
தகைமை/தொழில்: Bachelor OF Pharmacy (Hons)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/12019

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 16 சூரி 7 செவ் 3 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/12021

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 94





மூடு பல்லக்கிலே வைத்துப் பழுவேட்டரையர் யாரைக் கொண்டு வருகிறார் என்று மக்களுக்குத் தெரியாது. ஆகையால் மூடத்தனமாகப் பேசுகிறார்கள். ஆனாலும், அந்த மதுராந்தகத் தேவர் தம்மை அவ்வளவு கேவலப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை.

சீச்சீ! மூடுபல்லக்கில் உட்கார்ந்து கொண்டு, பழுவேட்டரையரின் ராணியின் ஸ்தானத்தில் மறைந்து கொண்டு ஊர் ஊராய்ப் போவதா? இதுதான் ஆண்மைக்கு அழகா? இப்படியும் இராஜ்யம் சம்பாதிக்க வேண்டுமா? இப்படிச் சம்பாதித்த இராஜ்யத்தைத்தான் அவரால் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? பழுவேட்டரையர் முதலியோரை நம்பி அவர்களுக்கு உட்பட்டுத்தானே இராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும்? இந்த விடயத்தில் சுந்தர சோழ சக்கரவர்த்தி செய்து வருவதே அவ்வளவு சிலாக்கியமில்லைதான். பழுவேட்டரையர் போன்றவர்களுக்கு இவ்வளவு அதிகாரமும் செல்வாக்கும் அவர் அளித்திருக்கக் கூடாது.

அதிலும் மணி மணியாக இரண்டு அருமைப் புதல்வர்கள் இருக்கும் போது? நாடெல்லாம் அதிசயிக்கும் அறிவும் திறனும் உடைய புதல்வி ஒருத்தி இருக்கும் போது? அந்த மங்கை, சோதிடர் வீட்டில் பார்த்தவள், ஆற்றங்கரையில் பேசியவள், 'அவள் முகம் யாருடைய ஜாடையாயிருக்கிறது?.

அப்படியும் இருக்கலாமோ?' பைத்தியக்காரத்தனம். ஒருநாளும் அப்படி இருக்க முடியாது. ஏன் இருக்க முடியாது? ஒருவேளை அவ்விதம் இருந்தால், நம்மைப் போன்ற அறிவீனன் வேறு யாரும் இல்லை. நம்மைப் போன்ற துரதிர்ஷ்டசாலியும் இல்லை. இலங்கை முதல் விந்திய பர்வதம் வரையில் எந்தப் பெண்ணரசியின் புகழ் பரந்து விரிந்து பரவியிருக்கிறதோ, அவளிடம் நாம் எப்பேர்ப்பட்ட காட்டுமிராண்டியைப் போல் நடந்து கொண்டோம். அப்படி இருக்கவே இருக்காது. நாளைக்கு அவளிடம் எப்படி இளவரசரின் ஓலையுடனே சென்று முகத்தைக் காட்ட முடியும்?

இப்படியாக என்னவெல்லாமோ வானத்தையும் பூமியையும் சேர்த்து எண்ணமிட்டுக் கொண்டு வந்தியத்தேவன் காவேரி கரையோடு வந்து திருவையாற்றை அடைந்தான். அந்த ஊரின் வளமும் அழகும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

அது திருவையாறுதான் என்று கேட்டுத் தெரிந்து கொண்டான். அந்த அற்புத க்ஷேத்திரத்தின் மகிமையைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்ததெல்லாம் உண்மைக்குக் கொஞ்சம் குறைவாகவே தோன்றியது. ஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ள வர்ணனை இங்கே அப்படியே தத்ரூபமாய்க் காண்கிறது.

முந்நூறு ஆண்டு காலத்தில் மாறுதல் ஒன்றுமேயில்லை. அதோ காவேரியின் கரையில் உள்ள மரங்கள் என்ன செழிப்புடன் வளர்ந்திருக்கின்றன. பலா மரங்களில் எவ்வளவு பெரிய பெரிய பலாக்காய்கள் தொங்குகின்றன. இந்த மாதிரி தொண்டை மண்டலத்தில் எங்கும் பார்க்கவே முடியாது தான்.

ஆகா! வளமான இடங்களுக்கென்று குரங்குகள் எங்கிருந்தோ வந்து விடுகின்றன. அவை கிளைக்குக் கிளை தாவுவது எவ்வளவு அழகாயிருக்கிறது? சம்பந்தப் பெருமான் என்ன சொல்லியிருக்கிறார்? இதோ ஞாபகம் வருகிறது?

திருவையாற்று வீதி முனை அரங்கங்களில் பெண்கள் நடனம் ஆடுகிறார்கள். இந்த ஆடலுக்கேற்ற பாடலோடு மத்தளச் சத்தமும் முழங்குகிறது. அந்த முழக்கத்தைக் கேட்ட குரங்குகள் மேகங்களின் கர்ஜனை என்று எண்ணி உயர்ந்த மரங்களின் உச்சாணிக் கிளைகளில் ஏறி மழை வருமா என்று வானத்தைப் பார்க்கின்றன. அடடா!

இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது. உயர்ந்த மரங்களில் உச்சாணிக் கிளைகளில் குரங்குகள் ஏறுகின்றன. அது மட்டுமா? ஆடல் பாடல்களுக்குரிய இனிய சத்தங்களும் ஊருக்குள்ளிருந்து வருகின்றன.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### குதிரைக்கு தோஷம்



(நேற்றைய தொடர்ச்சி)

அவர்கள் மேலும் மன்றாடி, இறுதியில் நான்கு பணம் கொடுத்துவிட்டு, குதிரையை ஓட்டிக் கொண்டு சென்றார்கள். அதற்குப் பிறகு குருவுக்கு அதிகமாகச் சலிப்பு ஏற்பட்டு விட்டது,

"இந்தக் குதிரையினால் எவ்வளவு செலவு? இப்படிப்பட்ட குதிரை நமக்குத் தேவைதானா? பணமெல்லாம் போய்க் கொண்டே இருக்கிறது. மனத்தில் நிம்மதியும் போய்க் கொண்டிருக்கிறது. எவ்வளவு கஷ்டங்கள்... நஷ்டங்கள்...? நம் கௌரவத்துக்கு எவ்வளவு சங்கடங்கள்... சஞ்சலங்கள்? இனி எனக்கு குதிரையே வேண்டாம். கால்நடையாகவே செல்லலாம்!" என்று அலுத்துக்கொண்டார். அதைக் கேட்ட சிஷ்யர்களுக்குத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"இப்படியெல்லாம் சொல்லாதீர்கள் குருதேவா! தாங்கள் இனி நடந்து வருவது என்பது நடக்கக்கூடிய காரியமா? உங்களுக்குத் தள்ளாமை வந்து எவ்வளவோ காலமாகிவிட்டது எங்கள் பேச்சைத் தள்ளாதீர்கள், நீங்கள் நடக்கவே கூடாது. நாங்கள் சம்மதிக்கவே மாட்டோம்" என்று பலவாறு அவரைச் சமாதானம் செய்தார்கள்.

"இல்லை... இல்லை... என்னால் நடக்க முடியும்! இந்தக் குதிரையினால் நாம் அடைந்த சங்கடங்கள் போதும்' என்று சலிப்புடன் சொன்னார் குரு.

அவர்கள் உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தான் ஒரு வள்ளுவர் பண்டாரம். அவன் அவர்களை நெருங்கி வந்து, "ஐயா! உங்கள் யாருக்கும் எந்தக் கஷ்டமும் வராது. கவலைப்படாதீர்கள்!" என்றான்.

"அப்படியா? இனி எங்களுக்குக் கவலையே இல்லையா?" என்று அவனைச் சூழ்ந்து கொண்டார்கள் அவர்கள்.

"ஆமாம்! எனக்குத் தெரியும்...! உங்களுக்கு வந்த கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் இந்தக் குதிரையைப் பிடித்திருக்கும் தோஷம் தான் காரணம்! இந்தத் தோஷத்தை நிவர்த்தி செய்துவிட்டால் அப்புறம் உங்களுக்குச் சந்தோஷம் தான். சந்தேகம் வேண்டாம்" என்று உறுதியான குரலில் உரைத்தான் பண்டாரம்.

"அப்படியா?" என்று அதிசயித்தார்கள் அவர்கள்.

"ஆமாம்! செலவோடு செலவாக நீங்கள் எனக்கு ஐந்து பணம் கொடுத்தால் நான் இந்தக் குதிரையின் தோஷத்தை நீக்கி விடுவேன். நான் கிரக சாந்தி செய்தேனானால் குதிரையின் தோஷம் நிவர்த்தியாகிவிடும்" என்றான் அவன்.

அவன் பேச்சில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. செலவுக்குப் பயந்து குதிரையை விட்டுவிடக் கூடாது என்று எண்ணி, பண்டாரத்துக்குப் பணம் தருவதற்கு இசைந்தார்கள். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்கு பதிலாக தலையால் நடப்பதையொக்கும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆவணி மூலநாளில் பரி வரும் பெப்ரவரி 4இல் நரி வரும்

பாண்டிய மன்னர் சபையில் முதன் மந்திரியாக இருந்த மாணிக்கவாசகர் குதிரைகளை வாங்குவதற்காகத் தன் படையினருடன் திருப்பெருந்துறைக்குச் செல்கிறார்.

அங்கு குருந்தமர நிழலில் அடியார் கூட்டத்துடன் இருந்த அருட்குருவைக் கண்ணுற்று அவரால் ஆட்கொள்ளப்பட, தான் கொண்டு சென்ற பொருள் அனைத்தையும் அடியார்களுக்காகச் செலவிட்டார்.

மந்திரியின் இச்செயல் கண்ட பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரை உடனடியாக நாடு திரும்புமாறு ஓலை அனுப்பினான்.

மன்னன் அனுப்பிய ஓலை கண்ட மாணிக்கவாசகர் திணுக்குற்றார்.

யாது செய்வதென்று தெரியாமல் அருட்குருவிடம் முறையிட, அவரோ வாதவூரா நீவிர் மதுரை செல்க. ஆவணி மூலநாளில் குதிரைகள் வரும் என்று மன்னர்க்குத் தெரியப்படுத்துக என்றார்.

தன் குருநாதர் கூறியபடி, மதுரை சென்ற வாதவூரர் ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் எனத் தெரிவித்தார்.

ஆவணி மூலநாள் வந்துற்றது. எனினும் குதிரைகள் வந்தாகவில்லை.

ஆத்திரமுற்ற பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்தான்.

ஆயினும் ஆவணி மூலநாள் பொழுதில் குதிரைகள் வந்து சேர்ந்தன. மன்னன் மகிழ்ந்தான். இருந்தும் இன்னுமோர் ஆச்சரியம் மன்னனுக்குக் காத்திருந்தது.

ஆம், வந்த குதிரைகள் அனைத்தும் நரிகளாக மாறி ஊளையிட்டன.

இதன்பின்னர் நடந்தவை என்ன என்பது நீங்கள் அறிந்தவை என்பதோடு அருட்குரு கூறிய ஆவணி மூலநாள் கதையை நிறைவுபடுத்தலாம்.

இனி 2023 பெப்ரவரி நான்காம் திகதியில் வரும் என்றது. வந்ததா? என்றால் இல்லை.

ஆம், 2023 பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வைத்து பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

இவ்வாறு தீர்வு அடையப்படுவதனால், நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை ஒரு தாய் மக்களாக – சகோதரர்களாக அனுஷ்டிப்போம் என்பது அவர் பங்கேற்ற கூட்டத்தில் ஆற்றிய உரையாக அமைந்தது.

ஆம், இன்று பெப்ரவரி 04ஆம் திகதி. இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம்.

இருந்தும் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைத்ததா? இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதா? என்றால் இல்லை என்பதே அதற்கான பதில்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர்; தான் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை எனும்போது, அவர் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா என்ன?

ஆக, அங்கு குருந்தமர நிழலில் இருந்தவர் ஆவணி மூலநாளில் குதிரையை அனுப்பினார்.

ஆனால் இங்கோ தீர்வுக்குப் பதிலாக சுதந்திர தினத்தில் நரிதான் வரும்போல தெரிகிறது.

# அரச அதிகாரிகளுக்கான உத்தரவு தேர்தலுக்கு பாதிப்பாக அமையும்

## பஃவ்ரல் அமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

கடன் அடிப்படையில் வேலைகளை மேற்கொள்ள வேண்டாம் என அரச அதிகாரிகளுக்கு விடுத்திருக்கும் உத்தரவு உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைக்குதடையாக அமையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதனால் இந்த அறிவிப்பு வாக்களிப்பு முடியும்வரை, தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொருந்தாது என பஃவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக் கொண்டுள்ளது

பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஹேன ஹெட்டியாரச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்கால வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் அரசியல் கட்சி மற்றும் மக்கள் மத்தியில் அதிக அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள தேர்தல் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்பாகும். இதற்கு நாட்டுக்குள் இருக்கும் பொருளாதார பிரச்சினையும் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் அரச தரப்பினரால் அடிக்கடி தெரிவிக்கப்படும் அறிவிப்புகள் காரணம் என்பது இரகசியமானதல்ல.

தற்போதும் அரச தரப்பினரால் மேற்கொள்ளப்படும் அறிவிப்புக்கள் ஊடாக தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. அது கடன் அடிப்படையில் வேலைகளை மேற்கொள்ள வேண்டாம் என நீங்கள் அரச நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கி இருப்பதாகும்.

அதேநேரம் அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரச அதிகாரிகள் அதற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூற வேண்டும் என தெரிவிப்பதன் ஊடாக, அரச நிறுவனங்கள் தேர்தல் ஒன்றின்போது சாதாரணமாக மேற்கொள்ளும் மீள செலுத்தும் செலவுசெயற்பாடுகளுக்கு தடைகள் ஏற்படலாம்.

அதனால் பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் அரச நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் இவ்வாறான கட்டளை, வாக்களிப்பு முடியும்வரை, தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொருந்தாது என அறிவிக்க வேண்டும் எனவும் இதன்பிறகு இதனுடன்தொடர்பாக விடுக்கப்படும் சுற்றுநிருபங்கள் ஊடாக இந்த விடயங்களை தெளிவாக உள்ளடக்குமாறும் உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

நாட்டுக்குள் பாரிய பொருளாதாரப் பிரச்சினை இருப்பதை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும் அதனை காரணமாகக் கொண்டு மக்களின் வாக்குரிமைக்கு தடங்களை ஏற்படுத்துவது அல்லது பறித்துக்கொள்வது ஜனநாயகத்தை மதிக்கின்ற எந்த தலைவரும் செய்யக்கூடாத நடவடிக்கையாகும். உங்களைப் போன்ற தலைவர் அவ்வாறு செயற்படமாட்டார் என நாங்கள் நம்புகிறோம்.

அத்துடன் அரசியலமைப்பின் 33ஆவது (ஏ) யாப்பின் பிரகாரம் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்துவது மற்றும் உறுதிப்படுத்துவது ஜனாதிபதி என்றவகையில் உங்களின் பொறுப்பாகும்.

அதேநேரம் அவ்வாறு செயற்படுவதன் மூலம் உங்களுக்கு தேசிய மற்றும் சர்வதேசத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு காரணமாவதுடன் அதன் நம்பிக்கையை பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு இலகுவாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மகிந்த பொறுப்பு இல்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

"கோட்டாபய அரசில் எடுக்கப்பட்ட நிறைய தீர்மானங்களில் மகிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்டிருக்கவில்லை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மகிந்த பொறுப்புக் கூறத் தேவையில்லை."

இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,"

காலிமுகத்திடல் போராட்டத்தால் மகிந்த ராஜபக்ஷவின்பெயருக்கு ஏற்பட்ட சேதம்தான் எங்களுக்குக் கவலை. அவருக்கு அந்த நிலை ஏற்பட்டிருக்கக்கூடாது.

கோட்டாபய அரசில் நிறைய தீர்மானங்களில் மகிந்த சம்பந்தப்பட்டிருக்கவில்லை. பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் அவர் பொறுப்புக்கூறத்தேவையில்லை. அதுதான் அரசியல். நல்ல விமர்சனங்களை மட்டும் எதிர்பார்க்கக் கூடாது. அப்படியானவர்களால் அரசியல் செய்ய முடியாது.

எமது அரசியல் வரலாற்றில் இவ்வாறான பல நிகழ்வுகளை நாம் கடந்து வந்துள்ளோம். இவ்வாறான எல்லா சவால்களையும் எதிர்கொள்ள நான் தயார். நல்லாட்சியிலும் நான் பல சவால்களை எதிர்கொண்டேன். என்னை மூன்றுதடவைகள் சிறையில் போட்டார்கள்.

எம்மை அடித்து - கொலை செய்து - வீடுகளுக்குத் தீ வைத்து - அச்சமூட்டி எமது அரசியல் பயணத்தை நிறுத்த முடியாது. அரசியல் அதிகாரம் இருப்பது மக்களின் கைகளில். நாங்கள் அரசியலில் இருக்க வேண்டுமா, இல்லையா என்று அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

காடைத்தனம் ஊடாக எம் அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொது ஜனபெரமுன வெற்றியடைந்தே தீரும் என்றார். (ம)

## ஒரே குடும்பத்தில் மூவருக்கு 5 நீல இரத்தினக்கற்கள்

(கொழும்பு)

கதிர்காமம் கொச்சிபத்தான பகுதியில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு, 5 நீல இரத்தினக்கற்கள் கிடைத்துள்ளன.

கதிர்காமம் யாத்திரைக்கு செல்பவர்களுக்காக, பூசைத் தட்டுகளை விற்பனை செய்யும் மூன்று வர்த்தகர்களுக்கே, 5 நீல இரத்தினக்கற்கள் கிடைத்துள்ளன.

கதிர்காமம்• கொச்சிபத்தான பகுதியில் அண்மைக்காலமாக, இரத்தினக்கல் தோண்டும் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்தநிலையில், மூன்று பேருக்கு 5 இரத்தினக்கற்கள் கிடைத்ததை அடுத்து, அந்த இடத்திற்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மூவருக்கும் கிடைத்த 5 இரத்தினக்கற்களும், எலஹர பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு, சுமார் ஒரு கோடி ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குடாவுக்கான பேருந்து சேவையை விரைவுபடுத்துங்கள்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா கிராமத்திற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டும் என அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 980 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமம் பூநகரி வாடியடியில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. காலை 8.30 மணிக்கு இக்கிராமத்தில் இருந்து வெளியிடத்திற்கு செல்லும் தனியார் பேருந்து ஒன்று பிற்பகல் 2.30 மணிக்கு பின்னரே மீண்டும் பள்ளிக்குடாவை வந்தடையும். இவ் இடைப்பட்ட நேரத்தில் இக்கிராம மக்கள் பூநகரி, கிளிநொச்சி நகரங்களுக்கு செல்லாத முடியாத நிலை காணப்படுகின்றது.

பூநகரி வாடியடியில் தரித்து நிற்கும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை பள்ளிக்குடா கிராமத்திற்கு அனுப்புவதன் மூலம் பள்ளிக்குடா கிராம மக்கள், பூநகரி பிரதேச செயலகம், மருத்துவமனை, கிளிநொச்சி நகரம் என்பவற்றிற்கு சென்று வரக்கூடியதாக இருக்கும்.

குறித்த பேருந்து சேவையை பள்ளிக்குடாவுக்கு அனுப்புங்கள் என கிளிநொச்சி இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளரிடம் கோரிக்கை விடுவதாக பள்ளிக்குடா மக்கள் தெரிவித்தனர். (4-6-350)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டும் பொருளாதார, இன நெருக்கடிகளும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் வரும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தொடக்கவுரையினை எழுத்தாளரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான மு.இராசநாயகமும் கருத்துரையினை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேலும் ஆற்றவுள்ளனர். (4-6)

# தனிநபர் உணவு தவிர்ப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டது

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் மேற்கில் உணவகத்துடன் கூடிய மது விற்பனை நிலையத்தினை இடம் மாற்றுமாறு தனிநபர் ஒருவர் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் கைவிடப்பட்டுள்ளது.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவரின் உடல் நிலை மோசமான நிலையில் கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மதுவரித் திணைக்கள அதிகாரி, அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நேற்று முன்தினம் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவரை சந்தித்தனர்.

இதன்போது உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டவர் குறித்த மது விற்பனை நிலையமானது மக்கள் செறிந்து வாழும் பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், முன்பள்ளிகள், பொது மண்டபங்கள் உள்ள பகுதியில் அமைந்துள்ளது. இதனை இடம் மாற்றுங்கள் என தெரிவித்தார்.

சட்ட ஒழுங்கின் படி இடம் மாற்றம் தொடர்பாக மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடி மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்புவதற்கான கால அவகாசம் வேண்டும் என கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

குறுகிய காலங்களுக்குள் குறித்த மது விற்பனை நிலையம் இடம் மாற்றம் செய்யப்படாவிட்டால் மீண்டும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவேன் என பிரதேச செயலாளரிடம் தெரிவித்து தனது உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தினை தற்காலிகமாக கைவிட்டுள்ளார். (4-6-350)

# யோகா பயிற்சி வகுப்பு ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இலவச யோகா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த யோகா பயிற்சி வகுப்பில் ஆர்வமுள்ள எவரும் வயது வேறுபாடின்றி இணைய முடியும் எனவும்-மன ஒருமைப்பாடு மற்றும் மன அமைதி ஆகியவற்றை பெற்றுக்கொள்ள யோகாசனப் பயிற்சி வழிவகுக்கும் எனவும் இலக்கிய அணியினர் தெரிவித்துள்ளனர். குறித்த பயிற்சிநெறியை யோகா போதனாசிரியர் சி.உமாசுதன் பயிற்றுவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-6-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனாமடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 250 | 400 |
| தக்காளி | 300 | 250 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 250 |
| கோவா | 80 | 70 | 90 | 100 |
| கரட் | 200 | 160 | 200 | 240 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 |
| புடோல் | 200 | 180 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 600 | 500 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 240 | 400 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 90 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 320 | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 160 | 200 | 250 |
| கறிமிளகாய் | 600 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1300 | 1600 |
| போஞ்சி | 350 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்பள்ள | 200 | 100 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 160 | 280 | 300 |
| முள்ளங்கி | 60 | 60 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 140 | 120 |


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்
ஆளுமை திறனுக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டு கொண்டு இருப்பதால்
இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

* உடல் நலத்திற்கு ⇒எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு ⇒சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு ⇒தியானப்பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு ⇒அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட ⇒தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :04.02.2023 சனிக்கிழமை தொடக்கம் 10.02.2023வெள்ளிக்கிழமை வரை
நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

தலைமை:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர்,யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும்
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

அறிமுகவுரை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி R.K.விஜயநிர்மலா அவர்கள்
(தமிழ்நாடு இந்தியா )

பயிற்சிகளை வழங்குபவர்கள் :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி மு.சுபாஷினி அவர்கள் (இந்தியா)
மற்றும்
துணைபேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் துணைபேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745

(C-5900)



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்

தொழில் நிமித்தம் பயிற்சிபெற பகல் நேரமில்லாத தொழிலதிபர்கள்
வைத்தியர்கள் பொறியியலாளர்கள் வங்கி உத்தியோகத்தர்கள்
இன்னும் உயர் சமூக அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு

"V I P COURSE"

காலை 10.00 தொடக்கம் 12 மணி வரை

இரவு 7.30-தொடக்கம் 9.30 வரை

(விசேட பயிற்சிக்கட்டணத்துடன்)
பயிற்சிகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியை
ர.விஜயநிர்மலா மற்றும் மு.சுபாசினி அவர்கள் வழங்குவார்கள்
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்
வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745

(C-5899)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 109 ஏக்கர்...

டுள்ளது.

இதன்படி கடற்படை மற்றும் இராணுவத்தின் பிடியில் இருந்த ஜே/234, ஜே/246, ஜே/245 கிராமசேவகர் பிரிவுகளில் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதியினால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் விடுவிக்கப்பட்ட காணிப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-33,104)

## இலங்கை - அமெ...

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கை மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தவாறு அமெரிக்க ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாட்டு மக்களின் அமைதியான, வளமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்திற்காக, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் தொலை நோக்கையும் தொடர்ந்து பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜோ பைடன் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திரக் கொண்டாட்டத்துக்கு இணையாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கும் 75 ஆண்டுகள் நிறைவடைவதாகவும், இந்த நீண்டகால உறவு பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்த உதவும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1475
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 8 3 0 8 1 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1050
S 05 14 20 80
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 3262
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 07 74 77 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1368
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
N 18 06 26 68 74

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 329
தனுசு 08 14 32 48 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/03
சீட்டிழுப்பு இலக்கம் 5020
T 9 9 5 3 8 7
தேசிய லொத்தர் சபை


## இரு உறுப்பினர்...

விலகல் கடிதத்தை அவர்கள், நிதியமைச்சுக்கு அனுப்பியுள்ளனர்.

முன்னதாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்த இருவரும் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது ஏற்றுக் கொண்டனர்.

எனினும், பின்னர் இடம்பெற்ற ஆணைக்குழு சந்திப்பு ஒன்றின் போது கடந்த காலத்தை கணக்கில் எடுத்து விதிக்கப்படும் மின்சாரக் கட்டண அதிகரிப்பை ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து இந்த இருவரும் ஆட்சேபித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சுதந்திர தின...

தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் முன்வைத்த கேள்விக்கு பதிலளித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதனிடையே, ஆளும் கட்சியிலிருந்து சுயாதீன உறுப்பினர்களாக செயற்படும் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட குழுவினரும் இம்முறை தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளனர். (ம)

## 588 கைதிகளு...

சாலைகளில் இருந்து 588 கைதிகள் இன்று விடுதலை செய்யப்பட உள்ளதாக சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படும் கைதிகளும் இதில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## டிஜிட்டல் சாரதி...

அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த டிஜிட்டல் சாரதி அனுமதிப் பத்திரத்தை, தமது கையடக்கத் தொலைபேசியின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

இந்த புதிய சாரதி அனுமதிப்பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், இந்தப் பத்திரம் அனைத்து தரவுகளிலும் சேர்க்கப்படும் என்றார். (ம)

## வடக்கு, கிழக்கில்...

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று காலை 9 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இருந்து மட்டக்களப்பு நோக்கிய பேரணி ஆரம்பமாகவுள்ளது.

அதனை முன்னிட்டு நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்ப்பாணத்தில் பேரணி செல்லும் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதோடு பல்கலைக்கழக வளாகத்தில் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் இன்று வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து சேவையில் ஈடுபடுவோர், திரையரங்குகள் உட்பட்ட அனைத்து தரப்பினருக்கும் ஹர்த்தால் குறித்த அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பொதுமக்கள் இதே நிலையில் தமது வீடுகள் மற்றும் பொது இடங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் கறுப்பு கொடியினை கட்டி போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சிவில் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளது. (ம-104)

## இலங்கையின்...

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் இன்றாகும்.

ஜனாதிபதி ரணில் தலைமையில் இன்று நடைபெறவுள்ள நிகழ்வில் 16 நாடுகளின் இராஜதந்திரிகள் உட்பட 3,100 முக்கியஸ்தர்கள் பங்குபற்றவுள்ளனர்.

சுதந்திர தின நிகழ்வுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெறவுள்ளதால்பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள்செய்யப்பட்டுள்ளன.

காலை 8.30 மணிக்கு சுதந்திர தின நிகழ்வின் பிரதான நிகழ்வு ஆரம்பமாகும்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## 13வது ...

மலை உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய தலைநகர் புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கையில் 13 ஆவது சட்டத் திருத்தத்தை எவ்வித மாற்றமுமின்றி உடனடியாக அமுல்படுத்த வேண்டும் ,

குறித்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் எனும் கோரிக்கைகள் அடங்கிய மனு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைத் தமிழர்கள் - தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம)

# இலங்கைக்கு 100 மில்லியன்

## ஜப்பான் நன்கொடை

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கம் மற்றும் சீர்திருத்தங்களை உறுதிப்படுத்துவதில் ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்கும் என ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் டேக்கி ஷூன்சுகே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டேக்கி ஷூன்சுகே, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளிற்கு 100 மில்லியன் ஜப்பான் யென்னை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (ம)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1995 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.02.03 தினம் வெள்ளிக்கிழமை
P 10 16 26 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,718,680/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.03
சீட்டிழுப்பு இல : 4156
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,975,860/-
வெற்றி இலக்கங்கள் 32 45 49 65
ஆங்கில எழுத்து H
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 283
சீட்டிழுப்பு திகதி 2023.02.03
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 17 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,836,680/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 3,584,798/-
திகதி 2023-02-03
வெற்றி வாரம் 3707
வர்ணம் கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 12 24 45 56
மீனம்
1890 827
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,505,718/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 37 24 29 44 52
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1171
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 303,129,672.20
2023.02.03 வெள்ளிக்கிழமை
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1821
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.02.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,318,320/-
வெற்றி இலக்கங்கள் 09 34 49 72
ஆங்கில எழுத்து B
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் சடலம் மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பகுதியில் பிரபல நகைக்கடை உரிமையாளர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் உள்ள கலையரசி நகைக்கடை உரிமையாளரான 53 வயதுடைய பழநிநாதன் நெடுஞ்செழியன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவுப் பகுதியில் அமைந்துள்ள காட்டு அந்தோனியார் கோவிலுக்குள் சடலமான நிலையில் காணப்பட்டுள்ளார்.

இவர் வழமையாக காட்டு அந்தோனியார் கோவிலுக்கு சென்று வருவதாகவும் நேற்றுக் காலையும் கடையினை திறக்கவந்து விட்டு கோவிலுக்கு சென்று வருவதாக கூறி விட்டு சென்றுள்ளார். இந் நிலையில் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம)

## திலீபன் நினைவுத் தூபியில்

# இல்லறத்தை தொடங்கிய புதுமணத் தம்பதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புதுமணத் தம்பதிகள், நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் தாலி கட்டி நேற்றையதினம் புது வாழ்வை ஆரம்பித்துள்ளனர்.



அவர்களது திருமணத்திற்கு சமூக ஊடகங்களிலும் நேரிலும் வாழ்த்துக்கள் சொல்வதோடு அவர்களது இந்தச் செயலை பலரும் பாராட்டி வருகின்றனர். (ம-104)


**புலமைப்பரிசில் வகுப்புக்கள்**

யாழ்.நகரில்......
ஆசிரியர் என்.எஸ்.தீபன்
தரம் 04, 05
❖ IQ Classes ❖ Paper Classes
(சனி, ஞாயிறு தினங்களில்)
077 666 0749
(14501)

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✓ வயது - 22 தொடக்கம் 35
✓ தகுதி - பட்டதாரிகள்
(C-5902)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A சப்பல் லேன் யாழ்ப்பாணம் ✆ 0777-068-777

**ENGLISH WORLD** கட்டைப்பிராய் சந்தி, கட்டைப்பிராய்.

Group and Personal Classes
புதிய கல்வியாண்டு - 2023
தரம் - 06 அனைத்து பாடங்களும் ஆரம்பம்
தமிழ் மொழிமூலம் English Medium
05.02.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
தனிப்பாடம் மற்றும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
• புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.
(14480) தொடர்பு : 077 193 0298

**பெண் வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம், 1ஆம் குறுக்குத்தெருவில் இயங்கி வரும் சிறுவர்களுக்கான ஆடை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
வேலை.நேரம் : காலை (8.30 am - 6.30pm)
: காலை (9.00 am - 9.00pm)
முன் அனுபவமுள்ளவர்களும் வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 870 2188
(14491)

**ICT**
தரம் 6
English & Tamil Medium
(Zoom ஊடாக)
ஆரம்பம் - 05.02.2023
ஆசிரியர் : எஸ்.முரளி BIT
TP : 077 636 1414
(C-5897)

**பணியாளர்கள் தேவை**

உடுவில் பிரதேச சபை எல்லைக்குள் தங்கி நின்று வீடு பராமரிக்கவும் இருவர் (02), பொது நிறுவனம் ஒன்றிற்கு இரவு காவலரும் ஒருவர் (01), நிறுவன பெண் பராமரிப்பாளர் ஒருவரும் (01), தேவை.
★ நற்பழக்கம், சேவை மனப்பாங்கு மற்றும் தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
★ சம்பளம் திறமைக்கு ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(14498)
074 049 1582

**தீபம் கல்வி நிலையம்**
THEEBAM EDUCATION CENTRE
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)
புதிய கல்வியாண்டு - 2023
தரம் 6
• தமிழ் மொழி மூலம்
• ENGLISH MEDIUM
ஆரம்பம் 05.02.2023
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களிற்கு வாழ்த்துக்கள்
ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
அன்பான பெற்றோர்களே !
◆ உங்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்காக தீபத்துடன் இணைந்து தரம் 06 முதல் O/L , A/L வரை கல்வியைத் தொடருங்கள்.
◆ அடிப்படை ஆங்கிலம், சிங்களம், ICT வகுப்புகள் முற்றிலும் இலவசமாக நடைபெறும்.
◆ ஏனைய வகுப்புகளிற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் அனுமதிகள் வழங்கப்படுகின்றது.
அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0772247781 (C-5894) நிர்வாகி

**ஆசிரியர் தேவை**

தெல்லிப்பளையில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றுக்காக
(தரம் 6 - 11 வரை)
• கணிதம்
• விஞ்ஞானம் 077 834 3666
(14426)
Zoom Class
10-11 இந்துசமய வரலாறு - S.B.Sanu
077 834 3666

**சமையல் வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை. தங்குமிடம், உணவு இலவசமாக செய்து தரப்படும்.
சம்பளம் :- 45,000/= க்கும் மேல்
(C-5898) தொடர்பு :- 076 992 6401

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு - 2023
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்
05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)
தைப்பூச நன்னாள் அன்று காலை 7.40 - 8.40
அனுமதிகளை 18.01.2023 இருந்து பெற்றுக் கொள்ளலாம்
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
(14411)

**வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை, நோயாளர் நலன்புரிச் சங்கம்.**

**வருடாந்தப் பொதுக்கூட்டம்.**

05.02.2023ல் நடைபெற இருந்த வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டு 12.02.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.
இது தொடர்பாக ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.
Dr.வே.கமலநாதன் தலைவர்
திரு.து.சத்திவேல் உதவிச் செயலாளர்
(C-5896)

யாழ்.நகரின் No-1 கல்வி நிறுவனம்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்
மீண்டும் புதுப்பொலிவுடன் யாழ்.நகரின் பிரபல ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பில்
தரம் 6 புதிய கல்வியாண்டு
2023ற்கான வகுப்புக்கள்
தமிழ் மொழி மூலம், English Medium
தைப்பூச நன்னாளில் ஆரம்பம்
05.02.2023 ஞாயிறு காலை 9.00 மணி
◆ மாதாந்த, தவணைப் பரீட்சைகள்.
◆ சீரான நேர அட்டவணை
◆ தனிப்பட்ட கவனிப்பு
(14485)
அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படும்
077 459 8440


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில், 04.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org